## நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிறுவனம் - 2014

நவீன தொழில்நுட்பம் தொடர்பாக ஆதர் சீ கிளாக் நிறுவனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் அதிகாரச்சட்டத்தின் 40(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடுசெய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

நியமங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 | மீளாய்வாண்டின் போது ரூபா 5,354,108 தொகையான அறவிடமுடியாக் கடன் பதிவழித்தல் மற்றும் ஏற்பாடு தொடர்பாக நிறுவனம் பின்பற்றிய கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 | நீண்டகாலமாக ரூபா 4,077,452 கிரயத்திற்கு பெறுமதியிடப்பட்ட உப பாகங்கள், சிறிய உபகரணங்கள் மற்றும் ஏனைய இருப்பு உருப்படிபடிகள் தொடர்பாக நியாயமான பெறுமதி கணக்குகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவனத்தினால் அட்டுறு அடிப்படை கணக்கீட்டுக் பின்பற்றப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட வருமானங்கள் அறிமுகப்படுத்துகையில் காசு அடிப்படை பின்பற்றப்பட்டமையால் செயற்திட்ட வருமானங்களில் ஒவ்வொரு ஆண்டுகளுக்கிடையே அசாதாரண முரண்கள் ஏற்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த அறவிடமுடியாக் கடன் பதிவழித்தல் மற்றும் அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாட்டிற்கான கொள்கை தொடர்ந்தும் பின்பற்றக்கூடிய மற்றும் பின்பற்றக்கூடியதல்லாததாக அவதானிக்கப்பட்டது.

(இ) பணிக்கொடை கொடுப்பனவு ஆயுட்கணிப்பீடு பெறுமதி அடிப்படையில் இணக்கம் செய்கையில் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை கோட்பாடுகள், நிதிக்கூற்றுக்களில் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பணிக்கொடை ஏற்பாட்டினைக் கணிப்பிடும் போது பூரணமற்ற வருடம் பூரண வருடமாக கருதி கணக்கிடப்பட்டமையால் ஒவ்வொரு ஊழியரினதும் சேவைக்காலம் ஒரு வருடம் கூடுதலாக கணிப்பிடப்பட்ட காரணத்தினால் ரூபா 2,298,954 ஆல் வருடாந்த ஏற்பாடு மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், பணிக்கொடை கணிப்பீட்டின் போது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை கட்டியெழுப்புவதற்கு முகாமைத்துவம் செயற்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,309,659 ஆன இருப்பொன்று காணப்பட்டதுடன், அந்த இருப்புக்களுக்குரிய இருப்பு மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2000 சனவரி 19 ஆந் திகதிய 380 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (அ) செயற்திட்டங்களுக்கு தேவையான இயந்திரப் பொறி முறைகள் செயற்திட்ட மிகையினைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக திறைசேரி ஏற்பாடுகளிலிருந்து இயந்திரப் பொறிமுறைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| | (ஆ) சுற்றறிக்கையால் மேவுகை செய்யப்படாத பற்றரி பரிசோதனை, RCCB பரிசோதனை போன்ற செயற்திட்டங்கள் மூலம் கிடைக்கும் வருமான மிகை அதற்குரிய நேரடி மற்றும் மறைமுக பதவியணியினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ஆண்டினுள் ரூபா 2,588,339 தொகை மேற்கூறப்பட்ட பிரகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி அதிகாரச்சட்டம | தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி ரூபா 150,592 தொகை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டம் | அதிகாரச்சட்டத்திற்கு முரணாக படிகள் கருத்திற்கொள்ளப்பட்டு பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 9.7 மில்லியனால் நிதி விளைவு வீழ்ச்சியடைந்திருந்ததுடன், 2013 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற மற்றும் விலக்கிய உத்தியோகத்தர்களின் பிணக்கொடை கொடுப்பனவு தவறாக மீண்டும் கணக்கிடப்பட்டு மீளாய்வாண்டின் போது நிலுவை தொகையாக ரூபா |

| | |
|---|---|
| | 444,395 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயம் | அலுவலக நேரம் மு.ப 8.30 முதல் பி.ப 4.15 வரையாக இருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 7.2 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5.9 மில்லியனாக இருந்தமையால் ரூபா 1.3 மில்லியன் அதிகரிப்பு தென்பட்டது. வெளியக செயற்திட்ட வருமானம் ரூபா 11 மில்லியனாலும் அரச மானியங்கள் ரூபா 18 மில்லியனாலும் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

| திரவ விகிதம் | 2014 | 2013 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 8:3:1 | 6:4:1 |
| விரைவு விகிதம் | 7:6:1 | 5:8:1 |

விளைவற்ற தொழிற்படு மூலதனமொன்று நிறுவனத்தினுள் காணப்படுகின்மை நடைமுறை மற்றும் விரைவு விகிதப் பகுப்பாய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் 05 பிரிவுகளில் 50 செயற்பாடுகள் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிறைவேற்றப்படாத மற்றும் அரைவாசி நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கை 27 அளவில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டன.

(ஆ) நிறுவகத்தின் ஒவ்வொரு பிரிவுகளின் செயன்முன்னேற்றம் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன், ஒப்பிடுகையில் நிறைவேற்றப்பட்ட மட்டத்தில் காணப்படாமை அவதானிக்கப்பட்டதுடன், நிர்வாக மற்றும் நிதிப் பிரிவுகளின் செயற்பாடுகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படுத்தப்படாதிருந்த காரணத்தினால் செயன்முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்ற செயற்திட்டங்களுக்கு மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது மிகவும் கூடிய இலாப எல்லையை வைத்தமையால் விசேடமாக அரச நிறுனங்களின் செயற்திட்டங்கள் தொடர்பாக அரசிற்கு அவசியமற்ற செலவினப் பொறுப்பு ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடந்த சில ஆண்டுகளில் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவினால் ஒரே வகையான செயற்திட்டங்களை மாத்திரம் நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் புதிய செயற்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது சாத்தியவள அறிக்கையொன்றேனும் தயாரித்துக்கொள்ளாமல் ரூபா 12 மில்லியன் செலவு செய்து Residual Current Circuit Breaker உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் உழைத்த வருமானம் ரூபா 445,850 ஆக இருந்ததுடன், அவ்வியந்திரத்தின் பெறுமானத்தேய்வு பெறுமதியான ரூபா 1,200,000 தொகையையேனும் மேவுகை செய்வதற்கு போதியதாக இருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

செயற்திட்டம் மற்றும் பாடநெறிகள் என்பவற்றிற்காக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக சுழற்சி நிதியம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அந்நோக்கத்திற்கு முரணாக ரூபா 7,363,000 தொகை குறுங்கால முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியினர்களின் எண்ணிக்கை 177 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 95 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 82 பதவிகள் அதாவது 46 சதவீதம் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக எதுவித செயல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் செயற்படுத்தப்பட்டு வரும் இந்நிறுவனத்தின் மேல்மட்ட முகாமையின் 63 சதவீதம் வெற்றிடமாக வருடக் கணக்காக காணப்பட்டதுடன், நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பில் நேரடியாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்த காரணத்தினால் போதியளவில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 5.2 கொள்வனவு திட்டம்

நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 7,549,000 பெறுமதியான பொருட்கள் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், தொடர்பாடல் பிரிவிற்காக ரூபா 7,600,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 442,400 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தன.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 பிரிவின் பிரகாரம் பாதிடப்பட்ட வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்குமிடையே 11 சதவீதத்திலிருந்து 388 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு மற்றும் இருப்புக் கட்டுப்பாடு
(ஆ) செயற்திட்ட முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) திட்டமிடலும் செயன்முன்னேற்றக் கட்டுப்பாடும்